ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1958/73 - 2016 මාර්තු මස 18 වැනි සිකුරාදා - 2016.03.18

*1958/73 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### கிழக்கு மாகாண மாகாண சபை

*2016 ஆம் ஆண்டிற்ன் 01 ஆம் இலக்க, கிழக்கு மாகாண சுற்றுலா பணியக நியதிச் சட்டம் 2016, பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி சபையில் நிறைவேற்றப்பட்டது என்பதனையும் இதற்கான கௌரவ ஆளுநரின் ஒப்புதல் 2016, மாச்சு மாதம் 11 ஆந் திகதி பெறப்பட்டது என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன்.*

எம். சி. எம். செரிப்(f),
*மாகாணசபை செயலாளர்,*
*கிழக்கு மாகாண மாகாண சபை.*

*மாகாண சபை செயலகம்,*
*கிழக்கு மாகாண மாகாண சபை,*
*திருகோணமலை,*
*2016, மாச்சு 14.*

**2015ஆம் ஆண்டின் ............ஆம் இலக்க கிழக்கு மாகாணத்தின் கிழக்கு சுற்றுலாப் பணியக நியதிச்சட்டம்**

*கிழக்கு மாகாண சுற்றுலாத் தொழிற்துறையை அபிவிருத்தி செய்தல், கட்டுப்படுத்தல், கிழக்கு சுற்றுலா பணியகமொன்றைத் தாபித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்பான அல்லது அதற்கு இடைநேர் விளைவான கருமங்களை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு நியதிச்சட்டம். இது, 1968ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்திச் சட்ட ஏற்பாடுகளுக்கு ஒத்தியைபற்றதாகும்.*

முகவுரை.

கிழக்கு மாகாண மக்களின் கலாச்சார மற்றும் ஒழுக்க விழுமியங்களிற்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாத வகையில் கிழக்கு மாகாண சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டியது கிழக்கு மாகாண சபையின் அடிப்படையான கடப்பாடாகவிருக்கும். இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக சுற்றுலாத் துறைக்கான தேசிய கொள்கையொன்றை வகுத்து அமுலாக்குவது தொடர்பில் கிழக்கு மாகாண சபை தேசிய சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து அல்லது ஒத்தாசையாகவிருந்து செயற்பட விருப்பம் கொண்டிருக்கிறது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கிழக்கு மாகாண சபையினால் கீழ்வருமாறு சட்டமாக்கப்படுவதாக,-

குறுந் தலைப்பும் அமுலுக் கிடப்படும் திகதியும்.

1. (1) இந்நியதிச் சட்டம் "2014ஆம் ஆண்டின் …….. இலக்க கிழக்கு மாகாண கிழக்கு சுற்றுலாப் பணியக நியதிச்சட்டம்" என அழைக்கப்படும் என்பதுடன் ஆளுநரின் ஒப்புதல் கிடைக்கப்பெறும் அத்தகைய தினத்தில் அமுலுக்கிடப்படுதலுமாதல் வேண்டும்.

(2) இந்நியதிச் சட்டம் வலுவுக்கிடப்படும் அத்தகைய தினத்திலிருந்து 1968ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சட்ட ஏற்பாடுகள் இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு ஒத்தியைபற்றதாகும்.

## பகுதி I

### பணியகத்தைத் தாபித்தல்

கிழக்கு சுற்றுலாப் பணியகம்.

2. கிழக்கு சுற்றுலாப் பணியகம் (இதனகத்துப் பின்னர் "பணியகம்" எனக் குறிக்கப்படும்) ஒன்று தாபிக்கப்படுததாதல் வேண்டும்.

பணியகம் ஒரு ஒன்றிணைக் கப்பட்ட அமைப்பு.

3 . பிரிவு 2 இல் தாபிக்கப்பட்ட பணியகமானது ஓர் ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனம் என்பதுடன், இடையறா வழியுரிமையையும், பொது இலச்சினையையும் கொண்டமைதல் வேண்டும் என்பதுடன் அதன் பெயரில் வழக்கிடவோ அல்லது வழக்கிடப்படுதலோ முடியுமாதலும் வேண்டும்.

பணியகத்தின் உறுப்பினர்கள்.

4 . (1) பணியகம் கீழ்க்காட்டப்படும் உறுப்பினர்களைக் கொண்டமைதல் வேண்டும்:-

(அ) சுற்றுலா, சுற்றுலா விடுதி முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், நிதி முகாமைத்துவம், சட்டம் மற்றும் சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் தொழில் தகமையுள்ளவர்களி லிருந்து இதனகத்துப்பின்னர் "நியமன அங்கத்தவர்கள்" எனக் குறித்துக்காட்டி அடையாளப்படுத்தப்படும் ஐவரை அமைச்சர் நியமனம் செய்வார்.

(ஆ) கீழ் விபரிக்கப்படும் நான்கு (இதனகத்துப்பின்னர் "பதவிவழி உறுப்பினர்கள்" எனக் குறிக்கப்படும்) உறுப்பினர்கள் பதவி வழியாக நியமிக்கப்படுவர்.

(i) கிழக்கு மாகாண சுற்றுலாத் துறைக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர்:-

(ii) மத்திய அரசின் சுற்றுலாத்துறைக்குப் பொறுப்பான அமைச்சரினால் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்களிலிருந்து நியமிக்கப்படும் ஒரு சிரேஷ்ட அதிகாரி;

(iii) கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் அல்லது அவரால் பதவிப்பெயர் குறித்து நியமிக்கப்படும் பொலிஸ் பரீட்சகருக்குக் குறையாத தரத்திலுள்ள ஒரு பொலிஸ் உத்தியோகத்தர்;

(iv) கிழக்கு மாகாணசபையின் திறைசேரி உத்தியோத்தர்களிலிருந்து பதவிப்பெயர் குறித்து நியமிக்கப்படும் ஒரு சிரேஷ்ட உத்தியோகத்தர்.

(2) (அ) அமைச்சர் நியமன உறுப்பினர்களிலிருந்து ஒருவரை பணியகத்தின் தலைவராக நியமிப்பார்.

(ஆ) இவ்வுட்பிரிவின் பந்திகள் (இ) மற்றும் (ஈ) களின் ஏற்பாடுகளுக்கமைவாக தலைவரின் பதவிக்காலம் மூன்று (03) வருடங்களாகும்.

(இ) அமைச்சரினால் சாட்டப்படும் ஏதேனும் காரணம் அல்லது காரணங்களுக்காக தலைவரை அமைச்சர் பதவியிலிருந்து விலக்கலாம்.

(ஈ) தலைவரின் சுகவீனம், இயலாமை, இலங்கைக்கு வெளியே இருக்கின்றமை அல்லது வேறேதேனும் காரணங்களுக்காக அவர் தனது கடமைகளை நிறைவேற்ற தற்காலிகமாக முடியாதவராகவிருப்பின், அமைச்சர், ஏனைய நியமன உறுப்பினர்களிலிருந்து ஓர் அங்கத்தவரை பதில் கடமையாற்றும் தலைவராக நியமிக்கலாம்.

5. (அ) அமைச்சர் ஒரு நபரை பணியகத்தின் அங்கத்தவராக நியமனம் செய்யுமுன்னர், அத்தகைய நபர் பணியகத்தின் அங்கத்தவர் என்ற வகையில் தனது செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் அவரது நிதிசார் அல்லது ஏனைய அக்கறைகள் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக அமையாது என்பதில் திருப்தி அடைதல் வேண்டும். உறுப்பினர்களின் நிதி மற்றும் ஏனைய அக்கறைகள்.

(ஆ) அமைச்சர், பணியகத்தின் ஓர் அங்கத்தவருக்கு அவரது நியமனக் காலத்திலிருந்து ஏதேனும் அத்தகைய அக்கறை ஏற்பட்டிருக்கவில்லை என்பதில் காலத்துக்குக் காலம் திருப்தியடைந்து கொள்ளுதல் வேண்டும்.

(இ) பணியகத்திற்கு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள அல்லது நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள எவரேனும் நபரிடம், அமைச்சர் பொருத்தமானதெனக் கருதி கோரிக்கை விடுக்கின்ற அத்தகைய தகவலை அத்தகைய சந்தர்ப்பத்தில் அக்கோரிக்கைக்கமைவாகவும் இவ்வுட்பிரிவின் நோக்கத்திற்கமைவாகவும் அமைச்சருக்கு அந்நபரால் சமர்ப்பித்தல் இந்நியதிச்சட்டத்தில் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(ஈ) பணியகத்தின் உறுப்பினர் ஒருவர் பணியகத்தினால் வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒப்பந்தம் ஒன்றில் ஆர்வம் கொண்டவராக இருப்பின் அத்தகைய ஆர்வத்தை பணியகக் கூட்டமொன்றில் வெளிப்படுத்துவதுடன் அவ்வெளிப்படுத்துகை கூட்டக் குறிப்பிலும் பதிவிடப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உறுப்பினர் குறித்த ஒப்பந்தத்துடன் தொடர்பான ஏதேனும் விவாதத்திலோ அல்லது தீர்மானம் ஒன்றிலோ பங்கு பற்றுதலும் ஆகாது.

6 . (1) பணியகத்தின் இலச்சினை பணியகத்தினாலேயே தீர்மானிக்கப்படல் வேண்டும். பணியகத்தின் இலச்சினை.

(2) பணியகத்தின் இலச்சினை–

(அ) தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் அல்லது பணியகத்தினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற அத்தகைய நபரின் அல்லது நபர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருத்தல் வேண்டும்.

(ஆ) பணியத்தின் இரண்டு உறுப்பினர்களின் பிரசன்னம் இல்லாமல் ஏதேனும் சாதனத்திலோ அல்லது ஆவணத்திலோ பணியகத்தின் இலச்சினை பதிக்கப்படலாகாது என்பதுடன் அவ்விரு அங்கத்தவர்களும் தாம் பிரசன்னமாகி இருந்தமைக்கு அடையாளமாக அத்தகைய சாதனம் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

7. (1) பணியத்தின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைவர் தலைமை தாங்குவார். தலைவர் பிரசன்னமாகியிராதபட்சத்தில் அக்கூட்டத்திற்கு பிரசன்னமாகியிருக்கும் உறுப்பினர்களிலிருந்து ஒருவரை தங்களுக்கிடையே தலைவராகத் தெரிவு செய்வர். பணியகத்தின் கூட்டங்கள்.

(2) பணியகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்படும் ஒவ்வொரு வினாவும் பணியகக் கூட்டத்தில் ஆராயப்படும் என்பதுடன் கூட்டத்திற்கு பிரசன்னமாகியிருக்கும் அங்கத்தவர்களின் பெரும்பான்மையினர்களின் வாக்குகளினால் தீர்மானிக்கப்படும்.

(3) ஓர் அங்கத்தவரின் தெரிவு அல்லது நியமனம் குறைபாடுள்ளதென்பது அல்லது அது பின்னர் தெரியவந்திருப்பது அல்லது எவரேனும் அங்கத்தவர் தகுதியற்றவர் என்பது ஏதேனும் கூட்டமொன்றில் செய்யப்பட்ட அத்தகைய ஒரு தீர்மானத்தை வெற்றும் வெறிதாக்காது என்பதுடன் அது ஒவ்வொரு உறுப்பினரும் முறையாக தெரிவு செய்யப்பட்டு அல்லது நியமிக்கப்பட்டிருந்தனர் என்பதாகவும் அத்தகைய உறுப்பினர்கள் தகுதியாக இருந்து அத்தகைய தீர்மானத்தை மேற்கொண்டனர் என்பதாகவும் வலுவிலிருக்கும்.

(4) பணியகத்தின் அங்கத்தவர்களில் ஏதேனும் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்ற ஒரே காரணத்திற்காக கூட்டமொன்றின் ஏதேனும் நடவடிக்கையோ அல்லது செயலோ வலிதற்றதாகமாட்டாது.

கூட்ட நிறைவெண்.

8. பணியகக் கூட்டமொன்றிற்கான நிறைவெண் ஐந்தாக இருத்தல் வேண்டும்.

பதவி வழி உறுப்பினர்கள்.

9. பணியகத்தின் எவரேனும் பதவி வழி உறுப்பினர் ஒருவர் எப்பதவி வழி வாயிலாக நியமிக்கப்பட்டாரோ அப்பதவியில் அவர் நீடிக்கும் வரை பணியகத்தின் பதவி வழி உறுப்பினராக செயற்படுவார்.

நியமன உறுப்பினர்கள்.

10. (1) பணியகத்திற்கு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரும் அவரின் இறப்பு, பதவி விலகல் அல்லது பதவி நீக்கம் காரணமாக பதவியிழந்தாலன்றி மூன்று வருடங்களுக்கு பதவியிலிருப்பார் என்பதுடன் அவர் ஒழுக்காறு காரணத்தினால் நீக்கப்பட்டாலன்றி அத்தகைய பதவி விலகல் அல்லது பதவி நீக்கம் அவரின் மீள் நியமனத்திற்கு அவரைத் தகைமையற்றதாக்காது.

(2) அமைச்சர் குறித்துக்காட்டும் காரணங்களுக்காக எவரேனும் ஒரு நியமன உறுப்பினரை பதவியிலிருந்து நீக்கலாம்.

(3) எவரேனுமொரு நியமன உறுப்பினர் பதவி விலகல் சம்பந்தமாக அமைச்சருக்கு எழுத்துமூல வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டு அது அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்படும் அத்தகைய திகதிமுதல் அவர் தனது பதவியிலிருந்து விலகிக்கொண்டார் என்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) நியமன உறுப்பினர் ஒருவரின் வெற்றிடம் இறப்பு /பதவி விலகல் மற்றும் பதவி நீக்கம் காரணமாக ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அமைச்சர் இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக இன்னொரு நபரை உறுப்பினராக நியமிக்க முடியும் என்பதுடன் அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட உறுப்பினரின் பதவிக்காலம் முன்னைய உறுப்பினரின் மிகுதிப்பதவிக் காலத்திற்கு சமாந்தரமானதாகவிருக்கும்.

(5) எவரேனுமொரு உறுப்பினரின் சுகவீனம், அவர் இலங்கைக்கு வெளியே உள்ளமை அல்லது வேறு காரணங்களுக்காக தனது கடமைகளை தற்காலிகமாக நிறைவேற்ற முடியாதுவிடின், அமைச்சர் இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இன்னொரு நபரை அவரின் இடத்திற்கு நியமிக்கலாம்.

உறுப்பினராவதற்கு தகுதியின்மை.

11. எவரேனுமொரு நபரை பின்வருவன பணியகத்தின் உறுப்பினராக நியமிப்பதற்கு அல்லது உறுப்பினராகத் தொடர்வதற்கு தகுதியீனமாக்கும்:-

(அ) பாராளுமன்றம், மாகாணசபை அல்லது உள்ளூராட்சி மன்றம் ஒன்றில் உறுப்பினராயிருத்தல் அல்லது அவை ஏதேனுமொன்றிற்கு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படல்;

(ஆ) இலங்கை பிராஜாவுரிமை இழத்தல் அல்லது பிராஜாவுரிமை இல்லாதொழிக்கப்படல்;

(இ) நேரடியாக அல்லது மறைமுகமாக பணியகத்தில் அல்லது பணியகம் சார்பாக ஏதாவது ஒப்பந்தம் ஒன்றிற்கு உரிமை கோருபவராக அல்லது அதில் நன்மை பெறுபவராக இருத்தல்;

(ஈ) உறுப்பினராகவிருந்து அவர் பணியகத்தின் பணிகளை நிறைவேற்றுவதில் அவருக்கு பணியகத்தின் நிதி அல்லது வேறு விடயங்களிலுள்ள ஆர்வம் பணியக நோக்கத்துடன் முரண்பாட்டை ஏற்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுதல்;

(உ) சித்த சுவாதீனமற்றவர் என அடையாளம் காணப்படுதல் அல்லது பிரகடனப்படுத்தப்படுதல்;

(ஊ) கடன் இறுக்க வகையற்றவர் எனப் பிரகடனப்படுத்தப்படுதல்;

(எ) ஏதேனும் நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையொன்றை அனுபவித்தல் அல்லது அனுபவித்துக்கொண்டிருத்தல்.

12. இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக காலத்திற்குக்காலம் பணியகம் தீர்மானிப்பதற்கமைவாக உறுப்பினர்களுக்குரிய கொடுப்பனவுகள் செய்யப்படலாம். *உறுப்பினர்களின் ஊதியம்.*

பகுதி II

**பணியகத்தின் தொழிற்பாடுகளும் அதிகாரங்களும்**

13. பணியகத்தின் பணிகள் கீழ்வருவனவாக அமைதல் வேண்டும்:- *பணியகத்தின் பணிகள்.*

(1) கிழக்கு மாகாண சுற்றுலாக் கைத்தொழிற்றுறையை அபிவிருத்தி செய்தலும், கட்டுப்படுத்தலும்.

(2) சுற்றுலாக் கைத்தொழிற்றுறையை திட்டமிட்டு அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதற்கு தேசிய சுற்றுலாத்துறையினருக்கு சிபாரிசுகளை முன்மொழிதல்.

(3) கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாக் கைத்தொழிற்றுறையை விருத்தி செய்யும் நோக்குடன் மாகாணத்தினுள் அடையாளப்படுத்தப்பட்ட சுற்றுலாத்துறை சேவைகளை அபிவிருத்தி செய்தல்.

(4) மாகாணத்தில் உள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள், காட்சி நிறைந்த இடங்கள் போன்ற கவர்ச்சிகரமான இடங்களைப் பேணிப்பாதுகாத்தலும், கட்டுக்காவலாகவிருத்தலும்.

(5) தேசிய சுற்றுலாத்துறையினரின் ஒத்துழைப்புடன், கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத்துறை மையங்கள், சேவைகள் மற்றும் வசதிகளை தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் முன்னேற்றுதல்.

(6) கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாக் கைத்தொழிற்றுறையைப் பாதிப்புக்குள்ளாக்கும் நடவடிக்கைகளை அடையாளம் கண்டு அவைகளை பொருத்தமான செயற்பாடுகளினூடாக தணிப்பதற்கான ஒழுங்குபடுத்தலையும் கட்டுப்பாடுகளையும் மேற்கொள்ளல்.

(7) கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்ட தனி நபர் மற்றும் பிரத்தியேக வியாபார முயற்சிகளில் ஈடுபடுவோருக்குத் தேவையான நிதி, உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய வசதிகளை கடனாகவோ அல்லது உதவு தொகையாகவோ வழங்குதல்.

(8) சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்ட வியாபார முயற்சிகளையும், சிறு கைத்தொழிற்றுறைகளையும் அறிமுகப்படுத்தி விசேடமாக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை அதிகப்படுத்தி தேவையான பயிற்சிகளையும் வழங்குதல்.

(9) சுற்றுலாத்துறையில், சுற்றுலா விடுதி முகாமைத்துவம் சார்ந்த தொழில்சார் வல்லுநர்களை வெளிக்கொணரும் நோக்கத்துடன் சுற்றுலா விடுதிகள் முகாமைத்துவ கற்கை நிலையங்களை தாபித்தலும், பராமரித்தலும்.

(10) கிழக்கு மாகாணத்திற்கான சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தலும், அதனை இரு ஆண்டுகளுக்கொருமுறை மீளாய்வு செய்து தரப்படுத்தலும்.

14. பணியகத்தின் அதிகாரங்கள் கீழ்வருவனவாக அமைதல் வேண்டும்:- *பணியகத்தின் அதிகாரங்கள்.*

(அ) பணியகத்தின் நோக்கங்களை அடைவதற்காகவும், செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் பணியகம் ஏதேனும் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், தனியார் நிறுவனங்கள் என்பவற்றுடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கைச்சாத்திடல்.

(ஆ) பணியகத்தின் ஏதேனும் நோக்கத்தை அல்லது செயற்பாட்டை செயற்படுத்தி நிறைவேற்றுவதற்காக கொடைகள், நன்கொடைகள், மானியங்கள் என்பவற்றை பணமாகவோ அல்லது வேறு வகையாகவோ பெற்றுக் கொள்ளல்.

(இ) ஏதேனும் அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை உடமைகொண்டு அல்லது கொள்வனவு செய்து உடமையில் வைத்துக்கொள்ளுதல் அல்லது குத்தகைக்கோ, வாடகைக்கோ விடல் என்பதுடன் அவ்வாறு பெற்றுக்கொண்ட அல்லது கொள்வனவு செய்து உடமையில் வைத்திருக்கும் அத்தகைய அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை அடகு வைத்தல் அல்லது அதற்காகப் பிணையில் வைத்தல், விற்றல் அல்லது வேறு வழியில் கையளித்தல்.

(ஈ) பணியகத்தின் நோக்கத்திற்காக இயந்திர சூத்திரங்கள், உபகரணங்கள் மற்றும் ஆக்கப் பொருட்களை இறக்குமதி செய்தல்.

(உ) பணியகத்தால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் வசதிப்படுத்தல்களுக்காக பணியகம் கட்டணம் அல்லது விதிப்பனவுகளை அறவிடல்.

(ஊ) பணியகத்தின் செயற்பாடுகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கான நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல்.

பராதீனப்படுத்தப் பட்ட காணியின் துஸ்பிரயோ கங்களுக் கெதிரான தகவல் வழங்குமதி காரம் .

15. மாகாணத்தினுள் சுற்றுலா அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக எவரேனும் ஒரு நபருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் காணி அந்நபரால் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமை அல்லது குறித்த நோக்கத்திற்கன்றி வேறு நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றதென அமைச்சர் அறியவரும் அத்தகைய சந்தர்ப்பத்தில் அமைச்சரானவர் காணி மற்றும் சுற்றுலாத் துறைகளுக்குப் பொறுப்பான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கு அல்லது அமைச்சர்களுக்கு அத்தகைய துஸ்பிரயோகம் தொடர்பில் கவனத்திற்கு கொண்டு வருவார்.

பிரிவுகள் மற்றும் கிளைகள் தாபித்தலுக்கான பணியகத்தின் அதிகாரம்.

16. (1) பணியகம் அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றி செயற்படுத்தும் நோக்கத்திற்காக அத்தகைய எண்ணிக்கையான நபர்களை அல்லது பணியாட்களைக்கொண்டு கிழக்கு மாகாண எல்லைக்குள் பிரிவுகள் மற்றும் கிளைகளைத் தாபித்து செயற்படலாம்.

(2) உப்பிரிவு (1)இன்கீழ் தாபிக்கப்பட்ட பிரிவுகள் மற்றும் கிளைகளுக்கு பணியகம் தீர்மானிக்கின்ற அத்தகைய அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள் கையளிக்கப்படலாம்.

அமைச்சருக்கு ஆலோசனை வழங்கல்.

17. அமைச்சரினால், பணியகத்துக்கு ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு விடயம் தொடர்பிலும் பணியகம் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் அதன் கடமையாதல் வேண்டும்.

வேலை வாய்ப்பு சம்பந்தமாக அமைச்சர் அறிவுறுத்தல் வழங்குதலுக்கான பணியகத்தின் அதிகாரம்.

18 . (1) கிழக்கு மாகாண எல்லைக்குள் சுற்றுலா கைத்தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ள தொழில் வழங்குநர்கள் ஏதேனும் வேலை வாய்ப்புக்கள் வழங்குகின்ற அத்தகைய சந்தர்ப்த்தில் கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு அத்தகைய நியமனங்களில் முன்னுரிமை வழங்க அறிவுறுத்தல் விடுப்பது இந்நியதிச்சட்டத்தின் கீழ் பணியகத்துக்கு சட்ட முறையானதாதல் வேண்டும்.

(2) உப்பிரிவு (1) இன் நோக்கத்துக்காக,-

(அ) "தொழில் வழங்குநர்" என்பது, கிழக்கு மாகாணத்தின் நிருவாக எல்லைக்குள் சுற்றுலா விடுதிகள் மற்றும் சுற்றுலா சம்பந்தப்பட்ட வியாபார முயற்சிகளில் ஈடுபடும் உரிமையாளர்களைக் குறிக்கும்.

(ஆ) "வேலை வாய்ப்பு" என்பது, நிறைவேற்று தரத்தில் உள்ள பதவிகள் தவிர்ந்த ஏனைய பதவி நிலைகளைக் குறிக்கும்.

சுற்றுலாத்துறை சம்பந்தப்பட்ட வியாபார முயற்சிகளில் பணியகம் ஈடுபடுவதற்கான அதிகாரம்.

19. (1) தேசிய சுற்றுலா அதிகார சபையின் ஆலோசனையுடன், கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் பணியகம் சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்ட வியாபார முயற்சிகளில் ஈடுபடலாம்.

(2) இப்பிரிவின் நோக்கத்திற்காக "சுற்றுலாத்துறை சம்பந்தப்பட்ட வியாபார முயற்சிகள்" என்பது சுற்றுலாத்துறை விடுதிகள், உணவகங்கள் என்பவற்றை தாபித்து பராமரித்தல் மற்றும்

சுற்றுலாப் பயணிகளுக்கான போக்குவரத்து வசதிகளை வழங்குதல் என்பவற்றையும் அதனோடு தொடர்புடைய முயற்சிகளையும் உள்ளடக்கும்.

20. பணியகம் இந்நியதிச் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளை செயற்படுத்துவதில் 2005 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க சுற்றுலாத்துறைச் சட்ட ஏற்பாடுகளுக்கு மதிப்பளித்து ஒத்திசைந்து செயற்படும்.

சுற்றுலாத்துறை சட்ட ஏற்பாடுகளுக்கு ஒத்திசைந்து பணியகம் செயற்படுதல்.

பகுதி III

**சுற்றுலாப் பயணிகள் தங்குமிடப் பிரதேசங்களைப் பதிவு செய்தல்**

21. (1) கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் செயற்படும் எந்தவொரு சுற்றுலாத்துறை விடுதியும் பணியகத்தில் பதிவு செய்யப்படாமல் சுற்றுலாப் பயணிகள் விடுதிகளாக உபயோகப்படுத்தப்படுதலாகாது.

சுற்றுலாப் பயணிகள் தங்குமிடங்களைப் பதிவு செய்தல்.

(2) உட்பிரிவு (1)இன் கீழான ஏற்பாடுகள் கீழே விபரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் ஏற்புடைத்தாகாது:-

(அ) 2005ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க சுற்றுலாத்துறைச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது நிறுவனம் அல்லது சுற்றுலா விடுதி, உள்ளூராட்சி மன்றங்களால் பராமரிக்கப்படும் வாடிவீடுகள் அல்லது அரசாங்கத்தினால் அல்லது மாகாண சபையினால் நிருவகிக்கப்படும் சுற்றுலா விடுதிகள் மற்றும்

(ஆ) ஏதேனுமொரு சமய நிறுவனத்தினால் நிருவகிக்கப்படுகின்ற யாத்திரிகர்கள் தங்குமிடம்;

(இ) ஐந்து அறைகளுக்கு மேற்படும் ஒரு தங்குமிடப்பிரதேசம்.

(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக "தங்குமிடம்" என்பது, சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குமிட வசதிகளைச் செய்து கொடுக்கும் தனிப்பட்டவர்களின் வதிவிடங்கள், தங்குமிடங்கள் அல்லது ஏதாவது அத்தகைய இடங்களைக் குறிக்கும்.

(4) பணியகம், பதிவுக் கட்டணம் மற்றும் பதிவு செய்தல் முறைமைகள் தொடர்பாக ஒழுங்கு விதிகளை ஆக்கும்.

பகுதி IV

**பணியகத்தின் பணியாட்கள்**

22. (1) சுற்றுலாத்துறை சம்பந்தப்பட்ட முகாமைத்துவம், நிருவாகம் அல்லது ஏதாவது அது தொடர்பான துறைகளில் பட்டப்பின் படிப்பைக் கொண்டவர்களிலிருந்து ஒருவரை பணியகத்தின் பொது முகாமையாளராக அமைச்சர் நியமனம் செய்வார்.

பணியகத்தின் பொது முகாமையாளர்.

(2) பொது முகாமையாளர், பணியகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக செயற்படுவார்.

(3) பொது முகாமையாளர், பணியகத்தின் கொள்கை சார்ந்த பொதுவான உத்தரவுகள் மற்றும் நடவடிக்கைகளை நிறைவேற்றுபவராகவும், அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள், கடமைகள் மற்றும் ஆளணி நிருவாகக் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பானவராகவுமிருப்பார்.

(4) பொது முகாமையாளர், பணியகத்தின் கூட்டங்களில் பங்குபற்றி கருத்துப் பரிமாற்றம் செய்வார் எனினும் வாக்களிக்க தகுதியற்றவராவார்.

(5) பொது முகாமையாளர், தேவையெனக் கருதும் தனது அதிகாரங்கள், செயற்பாடுகள், கடமைகளை காலத்திற்குக் காலம் பணியகத்தின் எழுத்து மூல அங்கீகாரத்துடன் அல்லது எவரேனுமொரு ஊழியருக்கு எழுத்து மூலம் கையளிக்கலாம் என்பதுடன் அவ்வாறு

கையளிக்கப்பட்ட அதிகாரங்கள், செயற்பாடுகள் அல்லது கடமைகளை அவ் ஊழியர் பொது முகாமையாளரின் பொதுவான அல்லது விசேட பணிப்புகளுக்கமைவாக மேற்கொள்வார்.

(6) அமைச்சர் பணியகத்தின் பொது முகாமையாளரை பணியகத்தின் எழுத்து மூல முன்னனுமதியுடன், வலுவான காரணங்களை எழுத்து மூலம் காண்பித்து பதவியிலிருந்து நீக்கலாம்.

பணியகத்தின் பணியாட்கள் நியமனம் என்பன.

23. (1) பணியகம் இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக,-

(அ) அதன் பணியாட்களை நியமிக்கும், பயிற்றுவிக்கும், பதவி உயர்வு வழங்கும், பதவி நீக்கம் செய்யும் மற்றும் ஒழுக்காற்றுக்கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கும்.

(ஆ) அத்தகைய பணியாளர்களுக்கான படிகள் சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைத் தீர்மானிக்கும்.

(இ) அத்தகைய பணியாட்களுக்கான சேவைக்கட்டுறுத்துக்கள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானிப்பதுடன் பணியாட்கள் தொடர்பில் பணி நியமங்களை ஏற்படுத்தல் மற்றும் பணிச் செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல்; மற்றும்

(ஈ) பணியாட்களுக்கான நலவுரித்துத்திட்டங்கள் அல்லது சேமலாபநிதிகள் என்பவைகளைத் தாபித்தல் மற்றும் அத்தகைய திட்டங்கள் அல்லது நிதியத்துக்கு பங்களிப்புக்களைச் செய்தல்.

(2) அமைச்சர் உட்பிரிவு (1) இன்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்குவார்.

(3) பணியகம், பகிரங்க சேவையிலிருக்கும் எவ்வதிகாரியையும் பணியகத்தின் வேண்டுதலுக்கமைவாக தற்காலிகமாக விடுவிப்பு செய்து பணியகத்தின் பணியாளாக பணியகம் தீர்மானிக்கின்ற அத்தகைய காலத்திற்கு தாபனவிதிக் கோவை மற்றும் கிழக்கு மாகாண அரசசேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை என்பவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க நியமனம் செய்யும்.

## பகுதி V

### நிதி

பணியகத்தின் நிதி.

24. (1) (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பிடப்படும்) ஒரு நிதியைப் பணியகம் தனக்கெனக் கொண்டிருக்கும்.

(2) நிதியத்திற்கு கீழ் வருவன கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) கிழக்கு மாகாணசபையினால் காலத்திற்குக் காலம் பணியகம் சார்பாக வழங்கப்படுகின்ற அனைத்து வாக்குப் பணத்தொகைகளும்;

(ஆ) இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பணியகத்தினால் செய்யப்படுகின்ற இறுப்பனவுகள் மற்றும் கட்டணங்கள் மற்றும் அனைத்து வகையான பணரீதியான பெறுவனவுகளும்;

(இ) இந்நியதிச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பணியக செயற்பாடுகள், கடமைகள் மற்றும் அதிகாரங்களை பணியகம் பிரயோகிப்பதன் மூலம் கிடைக்கப்பெறுகின்ற அனைத்து வகையான பணரீதியான பெறுவனவுகளும்;

(ஈ) ஏதேனும் மூலங்களால் பணியகத்திற்கு பணரீதியாக கிடைக்கப்பெறுனின்ற கடன், நன்கொடை, கொடை மற்றும் உதவுத் தொகைகள் எவ்வாறாயினும் , இவ்வுட்பிரிவின் பந்திகள் (ஆ), (இ) மற்றும் (ஈ) களில் விபரிக்கப்பட்ட பெறுகைகள் யாவும் முதற்கண் மாகாண நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு அதன் பின்னரே நிதியத்திற்கு கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் பணியகம் அதன் கடமைகள், செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்களைப் பிரயோகித்து செயற்படுத்துகின்ற சந்தர்ப்பங்களில் பணியகத்திற்கு ஏற்படுத்தப்படுகின்ற செலவீனங்கள் யாவும் பணியகத்தின் நிதியிலிருந்து கொடுப்பனவு செய்து தீர்க்கப்படுதல் வேண்டும்.

25. (1) பணியகத்தின் நிதியாண்டு ஒரு கலண்டர் வருடமாகும். நிதியாண்டும் கணக்காய்வும்.

(2) பணியகம் அதன் வரவு மற்றும் செலவீனங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் முறையாக கணக்குப் புத்தககங்களில் வைத்திருக்கப் பொறுப்பாதல் வேண்டும்.

(3) பொதுக் கூட்டுத்தாபனங்கள் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஆவது சரத்தின் எற்பாடுகள், பணியகத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்தல் விடயங்களுக்கு ஏற்புடைத்தாகும்.

26. பணியக நிதி 1987 ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் பகுதி III இற்கு அமைவாகப் பராமரிக்கப்படுதல் வேண்டும். பணியகத்திற்கான நிதிப் பராமரிப்பு.

27. (1) பணியகம் ஒவ்வொரு முடிவுற்ற நிதியாண்டு தொடர்பான நிதி, கணக்காய்வறிக்கை மற்றும் நிருவாக அறிக்கைகளை அடுத்து வருகின்ற வருடத்தின் முதல் மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் கிழக்கு மாகாணசபையின் முன் வைக்க வசதியாக அமைச்சருக்கு சமர்ப்பிக்கும். வருடாந்த அறிக்கை.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் பணியகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், அறிக்கைகள் முதலியவற்றை அமைச்சர் சொல்லப்பட்ட உட்பிரிவிற்கமைவாக சபையின் முன் வைப்பார்.

28. பணியகம் இந்நியதிச்சட்டத்தின் கீழ் அதன் அதிகாரங்களைப் பிரயோகித்தல் செயற்பாடுகள் மற்றும் கடமைகளைப் புரிதல்களின்போது பணியகத்துக்கு கடப்பாடாக்கப்படுகின்ற அத்தகைய தேவைகளை நிவர்த்தி செய்யும்பொருட்டு அமைச்சரின் சம்மதத்தின் பேரில் அல்லது 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க , மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 21 இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக கடனைப் பெற்றுக் கொள்ளும். பணியகத்தின் கடன் பெறும் அதிகாரம்.

## பகுதி VI

## பொது

29. (1) பணியகம் இந்நியதிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நிபந்தனைகளுக் கமைவாக, அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளை பணியகத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு எழுத்து மூலம் ஒப்படைக்கும் என்பதுடன் அத்தகைய அலுவலர் அல்லது ஊழியர் அத்தகைய அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளை பணியகம் சார்பாகவும், அதன் பெயரிலும் நிறைவேற்றுதல் அல்லது செயற்படுத்துதலும் வேண்டும். பணியக அதிகார ஒப்படைப்பு.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் பணியகத்தினால் ஒப்படைக்கப் பட்டிருக்கின்ற அத்தகைய அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளை பணியகம் எச்சந்தர்ப்பத்திலும் மீள்வாங்கிக்கொள்ளலாம்.

30. (1) பணியகம் அதன் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளை செயற்படுத்தி பிரயோகித்து நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக அமைச்சர் காலத்திற்குக் காலம் பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்களை வழங்குவார் என்பதுடன் பணியகம் அத்தகைய பணிப்புரைகளுக்கு செயல்வடிவம் கொடுத்தலும் இந்நியதிச்சட்டத்தின் கீழ் ஏற்புடைத்தானதாதல் வேண்டும். மாகாண அமைச்சரின் பணிப்பு.

(2) உட்பிரிவு (1) இன் கீழான அமைச்சரின் பணிப்புரைகளுக்கமைவாக பணியகம் அதன் சொத்துக்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலான அத்தகைய அறிக்கைகள் , கணக்குகள் மற்றும் தகவல்களை அதற்கான படிவத்தில் அமைச்சருக்கு வழங்குதல் இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஏற்புடைத்தானதாதல் வேண்டும்.

உறுப்பினர்கள் அரச உத்தியோகத்தர்களாக கருதப்படுவார்கள்.

31. பணியகத்தின் அனைத்து உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தண்டனைச் சட்டக்கோவையின் தேவைப்பாடுகளுக்கமைய அரச உத்தியோகத்தர்களாக கருதப்படுவர்.

தண்டனைகள்.

32 . எவரேனும் நபர்

(அ) இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிகளுக்கமைவாக செயற்படுகின்ற எவரேனுமொரு நபரின் செயற்பாடுகளுக்கு எவ்வித சட்டபூர்வமான அல்லது நியாயாமாக காரணங்களுமின்றி தடையாக அமைந்தால்,

(ஆ) இந்நியதிச்சட்டத்தின் கீழ் தனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பேரில் எவரேனும் நபர்அத்தகைய அதிகாரங்களை அல்லது கடமைகளை செயற்படுத்திக்கொண்டு அல்லது புரிந்து கொண்டிருக்கையில் அந்நபரைச் **சினமூட்டக்கூடிய அல்லது ஆத்தரமூட்டக்கூடிய முறையில் நடந்து கொள்ளுதல் அல்லது உறவாடுதலில் ஈடுபட்டிருந்தால் ,**

(இ) **இந்நியதிச்சட்டத்தினால் எவரேனும் நபர் மீது தேவைப்படுத்தி பிணிக்கின்ற விடயங்கள் தொடர்பில்** அறிக்கைகள், தகவல்கள் எவற்றையேனும் வழங்கத் தவறுதல் அல்லது அத்தகைய அறிக்கை அல்லது தகவல்களை தெரிந்துகொண்டே பிழையாக சமர்ப்பித்திருந்தால் ,

அந்நபர் பொருத்தமான நீதிமன்றமொன்றின் முன்னிலையில் சுருக்கமுறை விசாரணையொன்றில் இந்நியதிச்சட்டத்தின் கீழ் குற்றமொன்றைப் புரிந்தவராக நிரூபிக்கப்படின் அவர் ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு விஞ்சாத தண்டப்பணமொன்றுக்கு குற்றவாளியாக்கப்படுவார்.

ஒழுங்கு விதிகள்.

33 (1) இந்நியதிச் சட்டத்தால் தேவைப்படுத்தப்படும் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் அத்தகைய ஒழுங்குவிதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அத்தினத்தில் அல்லது வர்த்தமானப் பத்திரிகை விளம்பரத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்ற அத்தகைய பிந்திய தினத்தில் நடைமுறைக்கு வரும்.

(3) அமைச்சரால் வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும் அத்தினத்திலிருந்து கூடிய சீக்கிரத்தில் மாகாணசபைமுன் வைத்து அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும்.

(4) உட்பிரிவு (3)இன் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட மாகாணசபையின் அத்தகைய அங்கீகாரம் அல்லது மறுதலிப்பு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்படுதல் வேண்டும்.

(5) உட்பிரிவு (3)இன்கீழ் ஏதேனுமொரு ஒழுங்குவிதி மாகாணசபையினால் அங்கீகரிக்கப்படாத அத்தகைய சந்தர்ப்பத்தில் அதன் அமுலாக்கத்தின் பின்னரான ஏதேனும் அத்தகைய செயற்பாடுகளுக்கு எவ்விதப் பாதிப்புக்களும் ஏற்படாதவாறு வெற்றும் வெறிதானதாகக் கருதப்படும்.

பொருள் கோடல்.

34. இந்நியதிச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி

"அமைச்சர்" என்பவர் சுற்றுலா எனும் விடயம் குறித்தொதுக்கப்பெற்ற கிழக்கு மாகாண சபையின் அமைச்சர் வாரியத்தின் அமைச்சரைக் குறிக்கும்.

"மாகாண சபை" என்பது, அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 154A(2) இன்கீழ் தாபிக்கப்பட்ட கிழக்குமாகாணத்தின் மாகாண சபையைக் குறிக்கும்.

"செயலாளர்" என்பவர் , சுற்றுலா என்னும் விடயம் குறித்தொதுக்கப்பெற்ற கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளரைக் குறிக்கும்.

"தேசிய சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை" என்பது, 2005 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை சுற்றுலா மற்றும் சுற்றுலா விடுதிகள் முகாமைத்துவ நிறுவனம், இலங்கை சுற்றுலா அபிவிருத்திப் பணியகம் மற்றும் இலங்கைப் பேரவைப் பணியகம் ஆகியவற்றை உள்ளடக்கும்.

"உள்ளூராட்சி மன்றம்" என்பது, மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், நகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைகள் சட்டம் என்பவற்றினால் தாபிக்கப்பட்ட மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் என்பவற்றை உள்ளடக்கும்.

"சுற்றுலாப்பயணி" என்பது, ஒரு இலங்கைத்தேசத்தவரை அல்லது ஒரு பிறநாட்டவரை உள்ளடக்கும்.

ஒவ்வாமையின்போது தமிழ் உரையே மேலோங்கும்

35. இந்நியதிச்சட்டத்தின் தமிழ் உரைக்கும் சிங்கள உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

4-387

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.